DECEMBER 2024 **P/ID 35328/PTL4U**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு முறையே 50 சொற்களில் விடை எழுதுக.

1. தொகைமரபு - பெயர்க்காரணம் தருக.

2. 'இகர இறுபெயர் திரிபுஇடன் உடைத்தே' - விளக்கம் தருக.

3. உழக்கு + ஆழக்கு என்னும் அளவுப் பெயர் புணருமாற்றைக் குறிப்பிடுக.

4. அ, ஆ என்று ஈற்றில் முடியும் மரப்பெயர் கிளவி அத்துச் சாரியை பெறுமாற்றைக் கூறுக.

5. குற்றியலுகரத்திற்கு இன் சாரியை தோன்றுமாற்றைக் குறிப்பிடுக.

6. 'அவைதாம் இயற்கைய ஆகும் செயற்கைய என்ப' - பொருள் தருக.

7. அ என்னும் சுட்டெழுத்து நீண்டு வருதலைக் கூறுக.

8. 'மகப்பெயர் கிளவிக்கு இன்னே சாரியை' - ஏன்?

9. வெயில் என்னும் சொல் அத்து, இன் சாரியை பெறுமாற்றைக் கூறுக.

10. 'தொழில் பெயர் எல்லாம் தொழிற் பெயர் இயல' - விளக்கம் தருக.

11. மரப்பெயர் கிளவி எச்சாரியை பெறும்?

12. வண்டும், பெண்டும் இன்சாரியை பெறுதலைக் கூறுக.

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு முறையே 250 சொற்களில் விடை எழுதுக.

13. அரை, குறை என்னும் அளவைச் சொற்கள் புணருமாற்றை எழுதுக.

14. உயிரீறுகள் சாரியை பெறுமாற்றை எடுத்துரைக்க.

15. தாம், நாம், யாம் என்னும் சொற்கள் புணருமாற்றை விளம்புக.

16. பஃது என்னும் சொல் ஆன் சாரியை பெறுமாற்றை விளக்குக.

17. இயல்பாகப் புணரும் அகர ஈற்றுச் சொற்களைப் பட்டியிலிடுக.

18. நும் என்னும் பெயர் அல்வழியில் புணர்வதை எழுதுக.

19. வன்தொடர், மென்தொடர் குற்றியலுகரம் எவ்வாறு புணரும்? விளக்கம் தருக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு முறையே 500 சொற்களில் விடை எழுதுக.

20. இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சியினைத் தொகைமரபின் வழிநின்று விவரிக்க.

21. உயிரீற்றுச் சொற்கள் வேற்றுமை ஏற்கும் பாங்கினை விளக்குக.

22. இகர ஈற்றுச் சொற்களின் புணர்ச்சியை விவரி.

23. னகர ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி மாற்றங்களை விவரி.

24. ஒன்பது முன் பத்து, ஒன்பது முன் நூறு என்னும் சொற்கள் எவ்வாறு புணரும்? விவரி.

———————